**SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA**

**FIRST YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2008 / 2009**

**HELD IN APRIL – 2009**

## ECS 1.11 - INTRODUCTION TO MICRO ECONOMICS

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. (அ) விலைக் கேள்வி நெகிழ்ச்சியினை வரைவிலக்கணப்படுத்தி, அது எவ்வாறு நிறுவனமொன்றிற்கான மொத்த வருமானத்துடன் தொடர்புபடுகின்றது என்பதனை விளக்குக.

(06 புள்ளிகள்)

(ஆ) நிறுவனமொன்று தனது உற்பத்திப் பொருளுக்கான கேள்விச் சார்பினை பின்வருமாறு மதிப்பிட்டுள்ளது.

$Q = 2{,}000 - 50P + 40\ PY + 0.01\ I$

PY ஆனது Y பொருளின் விலை = ரூபா 30

I ஆனது வீட்டுத்துறையினரின் வருமானம் = 40,000

(i) நிறுவனத்தினது கேள்விச் வளையியிற்கான Q சமன்பாடு யாது?
(ii) நிறுவனத்தினது மொத்த வருமான சமன்பாடு யாது?
(iii) வீட்டுத் துறையினரின் வருமானம் 50,000/- ரூபாவாக அதிகரிக்கின்றது எனக்கொண்டு உத்தம தொகையினைக் காண்க.

(03 x 03 = 09 புள்ளிகள்)

(இ) இழிவுப் பண்டம் என்றால் என்ன? சாதாரண பண்டத்திலிருந்து இது எவ்வாறு வேறுபடுகின்றது?

(05 புள்ளிகள்)

02. (அ) "சந்தை கேள்வி தொழிற்பாடானது தனிநபர் கேள்வித் தொழிற்பாட்டில் தங்கியுள்ளது. இக்கூற்றினை ஏற்றுக்கொள்கிறீரா? காரணங்கள் தருக.

(05 புள்ளிகள்)

(ஆ) 'எல்லைப் பயன்' என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது?

(05 புள்ளிகள்)

(இ) 'சமபயன் கோட்பாடு' என்பதனால் நீர் விளங்குவது யாது? விளக்குக.

(10 புள்ளிகள்)

03. நிறுவனமொன்று L,K ஆகிய இரண்டு உள்ளீடுகளைக் கொண்டுள்ளது. K ஆனது குறுங்காலத்தில் நிலையானதாகவும் காணப்படுகின்றது, இந்நிறுவனத்தின் குறுங்கால மொத்த உற்பத்தியானது பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| **L** | 0 | 2 | 4 | 6 | 8 | 10 | 12 |
|---|---|---|---|---|---|---|---|
| **Q = வெளியீடு (Output)** | 0 | 50 | 120 | 180 | 230 | 270 | 300 |

(அ) L என்ற உள்ளீட்டின் ஓரலகிற்கான விலை 40/- எனக் கருதிக்கொண்டு கீழுள்ள அட்டவணையை நிரப்புக.

| **SMC** | **$MP_L$** | **வெளியீடு (Output) Q** | **உள்ளீடு (Input) of L** | **$AP_L$** | **AVC** | **STC** |
|---|---|---|---|---|---|---|
| | | | 0 | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | 744 |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

(16 புள்ளிகள்)

(ஆ) K என்ற உள்ளீட்டின் அலகொன்றிற்கான விலையானது நிலையானதாகவும் K இனது ஈடுபடுத்திய தொகையிலும் (K=12) மாற்றமில்லையெனவும் கருதிக்கொண்டு, K என்ற உள்ளீட்டின் அலகொன்றின் மீது நிறுவனம் செலுத்தவேண்டிய தொகை யாது?

(04 புள்ளிகள்)

04. (அ) நிறுவனமொன்றிற்கான நீண்டகாலம் மற்றும் குறுங்காலம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு யாது?

(05 புள்ளிகள்)

(ஆ) பொருத்தமான வரைபடங்களைப் பயன்படுத்தி குறுங்கால சராசரிச் செலவு வளையி மற்றும் நீண்டகால சராசரி செலவு வளையி என்பனவற்றினை வேறுபடுத்துக.

(15 புள்ளிகள்)

05. (அ) "குறுங்காலத்தில் தனியுரிமை நிறுவனங்கள் எப்பொழுதும் அசாதாரண இலாபத்தினையே உழைக்கின்றன" விபரிக்குக.

(07 புள்ளிகள்)

(ஆ) தனியுரிமை நிறுவனமானது தனது வெளியீட்டிற்கான நிலையான எல்லைச் செலவு அலகொன்றிற்கு 50/- ரூபாவினைக் கொண்டுள்ளது. மேலும் இந்நிறுவனத்தின் கேள்வி வளையியிற்கான சமன்பாடு ஆனது பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளது.

$$Q = 10{,}000 - 40\,P$$

(i) நிறுவனம் தனது மொத்த வருமானத்தினை எந்த விலை மற்றும் தொகையில் உச்சப்படுத்தும்?

(03 புள்ளிகள்)

(ii) நிறுவனம் தனது மொத்த இலாபத்தினை எந்த விலை, தொகையில் உச்சப்படுத்தும்?

(03 புள்ளிகள்)

(iii) மொத்த நிலையான செலவு (TFC) 30,000/- எனக் கருதுக. வெளியீட்டு இலாப உச்சப்படுத்தல் மொத்த இலாபத்துடன் வெளியீட்டு வருமான உச்சப்படுத்தல் மொத்த இலாபத்தினை ஒப்பீடு செய்க.

(07 புள்ளிகள்)

06. இலங்கையின் பொருளாதார குறிகாட்டிகளில் உலக நிதி நெருக்கடி ஏற்படுத்திய தாக்கத்தினை விமாசன ரீதியாக பரிசீலனை செய்க.

(20 புள்ளிகள்)

07. (அ) விலை வேறாக்கம் எச்சந்தர்ப்பத்தில் சாத்தியமாகின்றது?

(05 புள்ளிகள்)

(ஆ) முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தர விலை வேறாக்கங்களை பொருத்தமான உதாரணங்களுடன் வேறுபடுத்துக.

(15 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

(அ) வரவுசெலவுத்திட்ட வளையி

(ஆ) சமபயன் வளையியின் பண்புகள்

(இ) MC = MR

(ஈ) நிறைபோட்டிச் சந்தையொன்றின் பண்புகள்

(05 x 04 = 20 புள்ளிகள்)

***